# ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு

## ஊவா மாகாண சபை அரச சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிக்காக ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரல் – 2025

ஊவா மாகாண சபை அரச சேவையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் III தரத்தின் வெற்றிடம் உள்ள 28 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு, ஊவா மாகாணத்தின் முந்தைய 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசிக்கும் கீழுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து 2025.12.26 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வ.இ. | பதவி, தரம் மற்றும் சம்பள அளவு | கல்வி மற்றும் தொழில் தகைமை மற்றும் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி |
|---|---|---|
| 01 | ஊவா மாகாண சபை அரச சேவையின் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் - தரம் III<br>**சம்பள அளவு:**<br>MN 3 - 2025 இற்கு அமைய, ரூபா 52,250 - 10x 800 -11x 1190- 10 x 1320 - 10 x 1350 – 100, 040/- அ.நி.சு. 10/2025 சுற்றுநிருபத்தின் அட்டவணை III இற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி வரை சம்பளம் வழங்கப்படும். | **வயது:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். அரச மற்றும் மாகாண அரச சேவையில் அதிகாரிகள் தொடர்பில் உச்ச வயது வரம்பு பொருந்தாது.<br>**கல்வித் தகைமை:**<br>துறைக்கு தொடர்புடைய கீழ் குறிப்பிடப்பட்ட இரு பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் துறையில் மூன்று பாடங்களில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருந்தல் (பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இணைந்த கணிதம், உயிரியல் அமைப்பு தொழிநுட்பம், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம்)<br>மற்றும்<br>சிங்களம், தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.<br>**தொழில் தகைமை:**<br>முன்றாம்நிலைக் கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட் நிறுவனம் ஒன்றால் வழங்கப்படும் ஈராண்டு கால்நடை நிர்வாக டிப்ளோமா அல்லது ஈராண்டு விவசாய டிப்ளோமாவை பெற்றிருத்தல்<br>அல்லது<br>தொழில் துறைக்கு தொடர்புடைய தேசிய தொழில் தகைமை (NVQ) 06 தரத்தின் தகைமையை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் கேட்டு ஆலோசனை பெற்ற பின் மேற் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். |

02. கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிக்கு தொடர்புடைய ஆட்சேர்ப்பு தகைமைகள், விண்ணப்பிக்க வேண்டிய முறை, ஆட்சேர்ப்பு முறை, போட்டிப் பரீட்சை பாடத்திட்டம் போன்ற அனைத்து விபரங்கள் உட்பட விரிவான அறிவித்தல் மற்றும் விண்ணப்பப் படிவங்களை https://exams.psc.up.gov.lk/ என்ற இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, இணையதளத்தில் குறிப்பிடப்பட்ட ஒன்லைன் அனுகல் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிக்கு தொடர்புடைய தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் மேற்குறிப்பிட்ட பதவிக்காக விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, குறித்த தகைமைகளை பூர்த்தி செய்யாத மற்றும் மேற் குறிப்பிடப்பட்ட வயது எல்லைக்கு அப்பால் சமர்ப்பித்திருக்கும், முறையான வகையில் சமர்ப்பிக்காத மற்றும் தாமதித்துக் கிடைக்கின்ற அனைத்து விண்ணப்பங்களும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

04. ஒன்லைனில் 2025.12.26 ஆம் திகதி மு.ப. 11.59 அல்லது அதற்கு முன்னர் சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் கட்டமைப்புக்கு அனுப்பிய (Submit) பின் விண்ணப்பத்தின் மென் பிரதியை தறவிக்கம் (மெனுவில் Application இற்கு பிரவேசிக்கவும்) செய்தல் வேண்டும். தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் அச்சுப் பிரதியைப் பெற்று பரீட்சைக்காக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டையும் குறித்த இடத்தில் ஒட்டி 2026.01.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், ஊவா மாகாண மற்றும் அரச சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பிரபொத்தகம வீதி, பிங்கராவ, பதுளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா மாகாண சபை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இற்கான தொழில்முறை அடிப்படையில் ஆட்சேர்ப்பு – 2025" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

05. மேலுள்ள பதவிக்காக கிடைக்கப்பெற்றிருக்கும் தகைமை பெற்ற விண்ணப்ப எண்ணிக்கை, இருக்கின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு மேல் அதிகரிப்பதாயின், திறந்த போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு அபேட்சகர்கள் பெறும் அதிக புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு, இந்த வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல்/ மேற்கொள்ளாது இருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையின் பகுதி ஒன்றை பூர்த்தி செய்தல் அல்லது இது தொடர்பில் இறுதி முடிவு ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு வசமானது. அதேபோன்று இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருந்தால் அது தொடர்பில் தெளிவை வழங்குவது/ தீர்மானிப்பது ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

06. இது தொடர்பில் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0552222400, 0552231460 இற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

**(எஸ்.எல். சோமரத்ன)**
**செயலாளர்**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு**

**2025.12.05 ஆம் திகதி.**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,**
**இலக்கம் 14/4, பிலிபொத்தகம வீதி, பிங்கராவ, பதுளை.**

tamilguru.lk